செய்தி வெளியீடு எண்–345 நாள் : 16.05.2008

# தமிழகத்தில் சிறந்த முறையில் நகர்ப்புற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ஜெயபால் ரெட்டி அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு

சென்னை வந்துள்ள மாண்புமிகு மத்திய நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஜெயபால் ரெட்டி அவர்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (16.5.2008) நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

அப்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், குறிப்பாக நகர்ப்புற வளர்ச்சி திட்டங்கள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சாலைகளில் தற்போது சிறந்த முறையில் நவீன பேரூந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், மயானங்களில் நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக மேம்பாலங்களும், சுரங்கப் பாதைகளும் சிறந்த முறையில் கட்டப்பட்டு வருவதாகவும், ஆட்டிறைச்சி கூடங்கள் நவீன முறையில் அமைக்கப்பட்டு வருவதாகவும், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். நவீன ஆட்டிறைச்சிக் கூடங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டு வருவதற்காக இந்திய பிராணிகள் நலச்சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளதாகவும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சியில் இ–கவர்னன்ஸ் (e-governance) சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக பல மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருவதற்காகவும் பாராட்டு தெரிவித்தார்.

தமிழகத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சென்னையில் 18 பெருந்திட்டங்கள் ரூபாய் 1362.81 கோடி மதிப்பீட்டிலும், மதுரையில் 7 திட்டங்கள் ரூபாய் 637.10 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூரில் 3 திட்டங்கள் ரூபாய் 587.37 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 28 திட்டங்கள் ரூபாய் 2587.29 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காகவும், திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்கும், மீஞ்சூரிலிருந்து கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்காகவும், செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்.

தமிழகத்தில் மேலும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துவதற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழகத்தில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது தொடர்பாகவும், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த சந்திப்பின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே. தீனபந்து, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.எம்.ஏ.கௌரிசங்கர், இ.ஆ.ப., மெட்ரோ ரயில் திட்ட தலைவர் திரு.முனிர்ஹோடா, இ.ஆ.ப., மெட்ரோ ரயில் திட்ட மேலாண்மை இயக்குநர் திரு.சோமநாதன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.